# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## செய்தி வெளியீடு

செய்திக் குறிப்பு எண்.25/2021, நாள் 29.06.2021

உலகை அச்சுறுத்தி வரும் கொரோனா பெருந்தொற்றை கட்டுப்படுத்தும் தமிழ்நாடு அரசின் பெரும் முயற்சியின் ஒரு பகுதியாக 25.06.2021 அன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் கொரோனா தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது.

இம்முகாமை மாண்புமிகு தேர்வாணைய உறுப்பினர்கள் முனைவர். பெ. கிருஷ்ணகுமார், திரு. ஏ.வி. பாலுசாமி, தேர்வாணையச் செயலாளர் திருமதி. பி. உமா மகேஸ்வரி, இ.ஆ.ப., தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு தேர்வாணையத் தலைவர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மண்டல சுகாதார அலுவலர் திரு. (டாக்டர்) N. பிரசாந்த் அவர்கள் தலைமையிலான மருத்துவக் குழுவினர் நடத்திய முகாமில் தேர்வாணைய அலுவலர்களும் ஊழியர்களும் கலந்து கொண்டு கோவிஷீல்டு / கோவேக்சின் தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டனர்.







செயலாளர்